# வந்தவாசி நகராட்சி

## திருவண்ணாமலை மாவட்டம்

# வேலூர் மண்டலம்



# 2018 - 2019

# நிர்வாக அறிக்கை

# வந்தவாசி இரண்டாம் நிலை நகராட்சி

# திருவண்ணாமலை மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2018 –2019

## பரப்பும் அமைப்பும்:

வந்தவாசி நகராட்சி தேர்வு நிலை பேரூராட்சியாக இருந்து பின்னர் அரசாணை எண்:129 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:17.05.1994ன் படி மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண்:85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:22.05.1998ன் படி மூன்றாம் நிலையிலிருந்து **இரண்டாம் நிலைக்கு தரம் உயர்த்தபட்டு தற்போது** செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி வந்தவாசி நகரப்பகுதியை உள்ளடக்கியதாகும் 1760ம் ஆண்டு ஆங்கிலத் தளபதி சர்.அயர்கூட் என்பவருக்கும் பிரான்ஸ் தளபதி சர்.லாலி என்பவருக்கும் யுத்தம் நடைபெற்றதே இந்நகருக்கு வரலாற்று சிறப்பு அம்சமாகும். இந்த யுத்தத்தில் சர்.அயர்கூட் வென்றார் என்பது வரலாறாகும்.

மேலும் இந்நகரில் பாய் நெசவு தொழில், குடிசை தொழிலாக இருந்து வருகிறது. இந்நகரை சுற்றியுள்ள கிராமப்பகுதிகள் விவசாய பகுதிகளாகும். இந்நகரத்தின் மக்கள் தொகை 31317 (2011ன் படி) ஆகும். நகரின் மொத்த பரப்பளவு **9.71 ச.கி.மீ.** வந்தவாசி நகரமானது, மேல்மருவத்தூர், ஆரணி, மற்றும் திண்டிவனம் ஆகிய நகரங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

அரசு ஆணை (நிலை) எண்.189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.08.1996ன்படி தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் பெண்களுக்கும் கீழ்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியில் அமைந்துள்ள வார்டுகளின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும்.

1. தாழ்த்தப்பட்ட பிரிவு பொது : 2 வார்டு (1,18)
2. தாழ்த்தப்பட்ட பிரிவு பெண் : 1 வார்டு (2)
3. பொதுவான வார்டுகளின் எண்ணிக்கை: 21 வார்டுகள்

1. <u>நகர மன்றம்</u>

அறிக்கை ஆண்டில் அரசாணை எண்.146, நாள்.24.10.2016–ன்படி தனி அலுவலர்களாக பணிபுரிந்த ஆணையாளர்களின் விவரம்.

| பெயர் திருவாளர் | முதல் | வரை |
|---|---|---|
| திரு.ச.பார்த்தசாரதி, | 01.04.2018 | 31.03.2019 |

2. (அ) அறிக்கை ஆண்டில் பணிபுரிந்த ஆணையாளர்

| பெயர் திருவாளர் | முதல் | வரை |
|---|---|---|
| திரு.ச.பார்த்தசாரதி, | 01.04.2018 | 31.03.2019 |

2 (ஆ) சிப்பந்திகள்

| பெயர் திருவாளர் | பதவி | முதல் | வரை |
|---|---|---|---|
| ஆர்.சந்திரசேகரன் | நகராட்சி பொறியாளர் | 01.04.2018 | 16.07.2018 |
| து.மணி | ஓவர்சீஸ் | 18.06.2018 | 31.03.2019 |
| என்.இராமலிங்கம் | மேலாளர் | 01.04.2018 | 31.03.2019 |
| ஆ.பிரேமா | கணக்கர் | 02.08.2018 | 31.03.2019 |
| G.K.நடராஜன் | நகரமைப்பு ஆய்வாளர் | 01.04.2018 | 31.03.2019 |
| எஸ்.இராமலிங்கம் | துப்புரவு ஆய்வாளர் | 01.04.2018 | 31.03.2019 |

3. தேர்தல்

தேர்தல் நடைபெறவில்லை.

3. நகரமன்ற கூட்டங்கள்.

அறிக்கை ஆண்டில் 9 சாதாரண கூட்டம் மற்றும் அவசர கூட்டங்கள் 3 மொத்தம் 12 கூட்டங்கள் நடைபெற்றது. இதில் 160 பொருட்கள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்பட்டு அனைத்தும் நிறைவேற்றப்பட்டது.

<u>சாலைகள்</u>

இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 39.32 கிலோ மீட்டர்கள் ஆகும். கீழ்கண்ட விவரப்படி பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. தார்சாலைகள் 11. 88 கி.மீ
2. சிமெண்ட் சாலைகள் 20.54 கி.மீ
3. நெடுஞ்சாலைத்துறை சாலைகள் 6.90 கி.மீ

புதிய சாலைகள் அமைத்தல்

வந்தவாசி நகராட்சியில் சிறுபான்மையினர் ஆணையத்தின் மூலமாக புதிய சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்காக ரூ.18.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் கால்வாய்

நகராட்சியில் 36.00 கி.மீ நீளத்திற்கு மழைநீர்க் கால்வாய் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தெருவிளக்கு

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட விவரப்படி தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. 40 வாட்ஸ் குழல் மின் விளக்குகள் – 868
2. 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் – 297
3. 70 வாட்ஸ் சோடியம் விளக்கு – 52
4. உயர்மின் கோபுர விளக்கு – 4
5. 250 வாட்ஸ் மெர்குரி விளக்கு – 49

6. 85 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு – 32
7. 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு – 72

-----

மொத்தம் – 1374

------

மேலும் 2018–2019ம் ஆண்டில் (MLA FUND) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.23.00 இலட்சத்தில் (LED) எல்.இ.டி விளக்குகள் 395 எண்ணிக்கை விளக்குகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

<u>குடிநீர் வசதி</u> :

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு கீழ்கண்ட விவரப்படி குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. பொதுக்கிணறுகள்:

    நகர்ப்பகுதி – 29 எண்ணிக்கை

2. கைப்பம்புகள்

    இந்திய மார்க் 2 கைபம்பு – 55 எண்ணிக்கை

    பவர் பம்ப் –120 எண்ணிக்கை

3. 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது.

| Sl.No. | Name of OHT | Capacity (Lakhs Litre) |
|---|---|---|
| 1. | Acharapakkam Road | 10.00 |
| 2. | Municipal Office Premises | 3.60 |
| 3. | Lakshmi Nagar (Kali Koil) | 1.00 |
| 4. | Ammaunavagam Taluk Office Road | 5.00 |
| | **Total** | **19.60** |

4. பொது குழாய்கள்.

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ளூர் நீர் ஆதாரங்கள் (Local Source) மூலம் 9 கிணறுகள் 123 பொது குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

5. வந்தவாசி குடிநீர்த்திட்டம் மற்றும் செயல்பாடு

வந்தவாசி நகருக்கு 18 கி.மீ தொலைவில் உள்ள செய்யார் அனக்காவூர் ஆற்றிலிருந்து 6 ஊடுருவல் கிணற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு வந்தவாசி நகரில் 2 எண்ணம் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு மேற்படி கிணறுகள் மூலம் நாள் ஒன்றிற்கு 2.48 MLD அளவு குடிநீர் பெறப்பட்டு, 4 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 2.00 மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் நபர் ஒருவருக்கு 79 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. தினசரி குடிநீர்த் தேவை 2.82 மில்லியன் லிட்டர் ஆகும்.

மேலும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் 18.61 கி.மீ. நீள நீர் உந்து பிரதான குழாய்கள் மற்றும் 20.48 கி.மீ. பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் ஆதாரம்:

இந்நகராட்சிக்கு அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 2.48 **MLD** குடிநீர் பெறப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 79 LPCD லிட்டர் வீதம் குடிநீர் தினசரி பெறப்படுகிறது.

தற்போதைய நிலை

இந்நகராட்சியில் 56 கைப்பம்புகள், 120 சிறுமின்விசைப்பம்புகள், மின்விசைப்பம்புகள் 29 திறந்தவெளி கிணறுகள், பொதுக்குழாய்கள் 123, மேல்நிலை நீர்தேக்க தொட்டி 4, தலைமை நீரேற்றுநிலையத்தில் தரைமட்டநீத்தேக்க தொட்டி 2, ஊடுருவல் கிணறு 9 இந்நகராட்சியின் அனக்காவூர் குடிநீர் திட்டத்தின் மூலம் 2.48 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

தற்சமயம் வரும் கோடை காலத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதற்கு இரண்டு பணிகள் ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிக்குச் சொந்தமான 1 குடிநீர் டாங்கர் லாரி (6000 லிட்டர் கொள்ளளவு 1 எண்ணம் மூலம் தினமும் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வந்தவாசி நகராட்சி பகுதியில் பழைய காஞ்சிபுரம் ரோடு, தாலுக்கா அலுவலகம் அருகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அம்மா உணவகம் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதற்கான ஆண்டுக்கு வரவு ரூ.20.11 இலட்சம், செலவு ரூ.25.33 இலட்சம்.

## வரவினங்கள் பற்றிய பொது விவரம்

### வரி நிலைப்பாடு

2018–2019ம் ஆண்டிற்கு சொத்துவரி நடப்பு கேட்புத்தொகை ரூ.174.87 இலட்சம். மொத்த வரி விதிப்புகள் 8003

2018–2019 ஆண்டிற்கு தொழில்வரி நடப்பு கேட்புத்தொகை ரூ.27.71 இலட்சம். மொத்த வரி விதிப்புகள் 3392

| வ.எண். | கட்டிடங்களின் விவரம் | வரிவிதிப்பு |
|---|---|---|
| 1 | வீடுகள் | 6118 |
| 2 | தொழிற்சாலைகள் | – |
| 3 | வணிக வளாகங்கள் | 1854 |
| 4 | அரசு கட்டிடங்கள் | 31 |
| | மொத்தம் | 8003 |

## வந்தவாசி நகராட்சி

1. துப்புரவு பணியாளர்கள் – 28
2. துப்புரவு பணியாளர்கள் (Out Source) – 69
3. துப்புரவு பணியாளர்கள் (DBC) – 35

### 1. துப்புரவு பணி

வந்தவாசி நகராட்சியில் 28 நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 3 மினி டிப்பர் லாரி மற்றும் ஒரு காம்பாக்டர் 3 ஆட்டோ (LCV) 14 (BOV) ஆகியவை துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நகர் பகுதிகளில் தினமும் துப்புரவு பணியும் வாரம் ஒரு முறை கால்வாய் தள்ளும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகர் பகுதியில் 35 டம்பர் பிளேசர் குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு குப்பைகள் அகற்றப்படுகின்றன. தினசரி தொற்று நோய் பரவா வண்ணம் பேருந்து நிலையங்கள் மற்றும் வார்டு பகுதிகளில் பிளிச்சிங் சுண்ணாம்பு பவுடர் தெளிக்கப்படுகின்றது.

### 1. கொசு ஒழிப்பு

நகராட்சி பகுதியில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி கைத்தெளிப்பான் மூலம் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்படுகிறது. மேலும் முதிர் கொசுவை அழிக்க தினசரி புகை மருந்து அடிக்கப்படுகின்றது.

### 2. தொழில் உரிமங்கள்

நகராட்சி பகுதியில் சிறிய நடுத்தர தொழில்கள் சுமார் 200 எண்ணிக்கையில் உள்ளன. இவைகளுக்கு உரிமம் வழங்குவதன் மூலமாக ரூ.40,000/– உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

### 3. மகளிர் சுய உதவிக் குழுக்கள்

நகராட்சி பகுதிக்குள் 51 மகளிர் சுய உதவிக்குழுக்கள் இயங்கி வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை திட்டம்.

வந்தவாசி நகராட்சி 24 வார்டு உள்ளடங்கிய 9.71 கி.மீ சுற்றளவு கொண்ட நகராட்சியாகும். இங்கு 2019–ல் தூய்மை பாரத இயக்கம் புள்ளி விபர சேகரிப்பின்படி 6548 வீடுகளும், 35876 மக்கள் வசித்து வருகின்றார்கள்.

இதன் மூலம் இங்கு தினசரி 12 டன் திடக்கழிவு உற்பத்தியாகின்றன. இவ்வாறு உற்பத்தியாகும் 12 டன் கழிவுகளில் இருந்து 6 டன் மக்கும் கழிவினை நுண் உரம் தயாரிக்கும் பணிக்கும் 0.5 டன் மறுசுழற்சி பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யவும் 5.5 டன் பயன்பாடற்ற கழிவுகளை எருகிடங்கிற்கும் எடுத்து செல்லப்படுகின்றன. மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் 28 மற்றும் தினக்கூலி பட்டியல் அடிப்படையில் 69 பணியாளர்களும் மொத்தம் 97 பணியாளர்கள் உள்ளனர். மேலும் திடக்கழிவு சேகரம் செய்ய 14 எண்ணிக்கையில் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 3 LCV வாகனம், 3 மினிலாரி, 1 டம்பர் பிளேசர் இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பணியில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் மூலம் பிரித்து வாங்கப்படும் மக்கும் கழுவின் மூலம் 3 இடங்களில் நுண் உரம் தயாரிக்கும் உரத்தினை இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் மறுசுழற்சி பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி மற்றும் வாரந்தோறும் புதன்கிழமை அன்று உள்ளூர் சந்தையில் விற்பனை செய்து தொடர்புடைய பணியாளர்களுக்கு விற்பனை செய்து தொகையினை பிரித்து வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணியில் சுமார் ––––––டன் அளவுள்ள மக்கும் கழிவுகள் உரமாக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பயனற்ற பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருளாக எரியூட்ட டால்மியா சிமெண்ட்ஸ்–ல் MOV போடப்பட்டு கழிவுகள் சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மூலம் திறந்த திடலில் கொண்டு போய் கொட்டுவது குறைந்துள்ளது.

## தூய்மை இந்தியா திட்டம்

மாண்புமிகு பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 2015 –2016 மற்றும் 2016–2017 நிதியாண்டிற்கு 784 + 491 தனிநபர் கழிவறை கட்டுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மத்திய அரசின் பங்கு தொகை ஒரு அலகிற்கு | ரூ.4000/– |
| மாநில அரசின் பங்கு தொகை ஒரு அலகிற்கு | ரூ.2000/– |
| நகராட்சி பங்கு தொகை ஒரு அலகிற்கு | ரூ.2000/– |
| மொத்தம் | ரூ.8000/– |

கழிப்பறை கட்டும் பணிக்கு மொத்தம் ரூ.102 இலட்சம் ஒதுக்கீடு செய்து இலக்கு முடிந்துள்ளது.

14/7/2020

Commissioner
Vandavasi Municipality

14/7/2020